## இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) - 2014

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, விரிவான வருமான கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் நாணய அதிகாரச்சட்டத்தின் (422 ஆம் அத்தியாயம்) 42(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுடனான இணங்கியொழுகதலை பரீட்சிப்பதற்காக பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் எனக்கு உதவியளிக்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சீபீஎஸ்எல் இன் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சீபீஎஸ்எல் இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குபோதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

மீளாய்வாண்டிற்கான நியூயோர்க் கட்டிடத்துடன் தொடர்புடைய வாடகை வருமானம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,479,296 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நாணயச்சட்ட அதிகாரச்சட்டத்தின் (எம்எல்ஏ) 39 ஆம் பிரிவு | இப் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் படி, பகிர்வின் பின்னரும் இலங்கை அரசாங்கத்திடமிருந்தான நிலுவைகளைத் தீர்த்த பின்னரும் சீபீஎஸ்எல் இனால் உழைக்கப்பட்ட இலாபங்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் திறைசேரிக்கு மாற்றப்படுதல் வேண்டும். அதற்கமைய, ரூபா 32.31 பில்லியன் நட்டம் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் முதல் இரு காலாண்டுகளினதும் இலாபங்களிலிருந்து முற்பணக் கொடுப்பனவாக 2014 இல் 2 சந்தர்ப்பங்களில் ரூபா 8.5 பில்லியன் தொகை திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 32.27 பில்லியன் தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள் மதிப்பீட்டு நட்டம் மற்றும் 7.97 பில்லியன் வெளிநாட்டு சொத்துக்கள் மீது ‘‘சந்தைக்கு சந்தை’’ இலாபம்/நட்டம் என்பன கணக்கிற்குள் எடுத்த பின்னர் இலங்கை மத்திய வங்கியால் பகிரக்கூடிய இலாபம் கணக்கிடப்பட்டிருந்தது. அத்துடன், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களின் மீதி தொடர்ந்தும் ரூபா 5.7 பில்லியன் எதிர்மறைப் பெறுமதியில் காணப்பட்டது.<br>‘‘2009 செப்தெம்பர் மாதத்தில், நாணயச் சட்டத்தின் 39 ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சீராக்கல்களை மேற்கொண்ட பின்னர் நிதியாண்டு காலத்தில் அரசாங்கத்திற்கு சீபீஎஸ்எல் இன் தேறிய |

| | |
|---|---|
| | இலாபத்தின் ஒரு பகுதியை மாற்றுவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டது'' என சீபீஎஸ்எல் இன் ஆளுனர் இது தொடர்பில் எனக்கு அறிவித்திருந்தார். |
| (ஆ) 2000 சனவரி 31 ஆந் திகதிய பீஎவ்/பீஈ 6 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை. | சீபீஎஸ்எல் தனது ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக அதன் சொந்த நிதிகளிலிருந்து முறையே மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 179.2 மில்லியன் மற்றும் ரூபா 178.1 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் வரி மீதான வரி என்பவற்றைச் செலுத்தியிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சீபீஎஸ்எல் இன் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் வரிக்கு முந்திய ரூபா 22,248 மில்லியன் நேரொத்த தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 31,532 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய நட்டத்தை விளைந்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் மேலும் ரூபா 9,284 மில்லியன் பின்னடைவு காட்டப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 22,879 மில்லியனால் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு எதிராக வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு நட்டம் மற்றும் மற்றும் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான தேறிய செலவினம் என்பன முறையே ரூபா 5,508 மில்லியன் மற்றும் ரூபா 24,601 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்தமை இப் பின்னடைவுக்கு பங்களித்த பிரதான காரணங்களாகும்.

### 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டின் ரூபா 12.8 பில்லியன் தொகையான (ரூபா 26.8 பில்லியன் தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு நட்டம் உள்ளடங்கலாக) மொத்த தேறிய செயற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாடிற்கான சீபீஎஸ்எல் இன் மொத்த தேறிய செயற்பாட்டு நட்டம் ரூபா 32.3 பில்லியன் தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு நட்டம் உள்ளடங்கலாக ரூபா 20.2 பில்லியனாக காணப்பட்டமையால், மொத்த தேறிய செயற்பாட்டு நட்டத்தில் 58 சதவீத அதிகரிப்பு காட்டப்பட்டது. அதேவேளை, முன்னைய ஆண்டின் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினம் என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாட்டுச் செலவினமான ரூபா 9.4 பில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 11.3 பில்லியனாக இருந்தது. ஆதலால், செயற்பாட்டுச் செலவினத்தில் 20 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் இலங்கை மத்திய வங்கியின் வருமானம் மற்றும் செலவின மாற்றங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே காட்டப்படுகின்றன.

| | 2014 | 2013 | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | **ரூபா பில்** | **ரூபா பில்** | **ரூபா பில்** | **சதவீதம்** |
| வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் | 26.9 | 4.0 | 22.9 | 572.5 |
| வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான செலவினம் | 3.1 | 4.4 | (1.3) | (29) |

| | | | | |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலாபம்/ (நட்டம்) | (32.3) | (26.7) | (5.6) | 21 |
| உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம்/ செலவினம் | (13.1) | 11.5 | (24.6) | (213.9) |
| செயற்பாட்டுச் செலவினம் | 11.3 | 9.4 | 1.9 | 20 |
| ஆண்டிற்கான தேறிய நட்டம் | (31.5) | (22.2) | (9.3) | (41.9) |

### 3.3 உள்நாட்டு நாணய முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சர்வதேச உலோக விலைகள் உயர் மட்டமொன்றுக்கு அதிகரிக்கும் வரை குற்றி நாணயங்களை மீள்சுழற்சிக்கு விடுவதில்லையென சீபீஎஸ்எல் தீர்மானமொன்றை எடுத்திருந்தது. ரூபா 5 மற்றும் ரூபா 2 முகப்பெறுமதியுடைய சுற்றோட்டத்திலுள்ள முறையே 3.25 மில்லியன் மற்றும் 2.39 மில்லியன் குற்றி மொத்தமான நாணயங்கள் 2014 திசெம்பர் 31 வரை பல ஆண்டுகளாக விற்பனை செய்யப்படாது வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) பல நினைவுச்சின்ன நாணயக் குற்றிகளின் இருப்பு நகர்வு மிகவும் மெதுவாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. ஆதலால், அவற்றின் மீதான பொதுமக்கள் கேள்வி குறைவைக் காட்டுகின்றது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலவறையிலிருந்த அத்தகைய நினைவுச்சின்ன நாணயக் குற்றிகளின் இருப்பு நிலைமை கீழே தரப்படுகின்றன.

| விபரங்கள் | வழங்கிய ஆண்டு | முகப் பெறுமதி | அச்சிடப்பட்டட குற்றிகளின் எண்ணிக்கை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலவறையிலுள்ள குற்றிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| 2500 பௌத்த ஜயந்தி | 1957 | 5 | 500,000 | 20,263 |
| சனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பதவி ஏற்கின்ற 3 ஆவது ஆண்டு நிறைவு (வெள்ளி) | 1992 | 1 | 2,000 | 204 |
| சனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பதவி ஏற்கின்ற 3 ஆவது ஆண்டு நிறைவு (தங்கம்) | 1992 | 1 | 100 | 53 |
| 2300 அனுபுது மிஹிந்து ஜெயந்தி | 1993 | 500 | 30,000 | 5,696 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஐ.நா சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவு | 1995 | 5 | 5,000 | 3,948 |
| இலங்கையின் 50 ஆவது சுதந்திர தினம் | 1998 | 1,000 | 25,000 | 6,542 |
| கிறிகெற் உலக கோப்பை- 1996 | 1999 | 1,000 | 25,000 | 10,031 |
| இலங்கை மத்திய வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு | 2000 | 1000 | 10,000 | 1,942 |
| இலங்கை கடற் படையின் 50 ஆவது ஆண்டு நிறைவு | 2000 | 1 | 2,000 | 107 |
| 2550 பௌத்த ஜயந்தி | 2006 | 2,000 | 10,000 | 8,193 |
| 2550 பௌத்த ஜயந்தி | 2006 | 1,500 | 20,000 | 18,515 |
| கிறிகெற் உலக கோப்பை | 2007 | 1,000 | 10,000 | 7,839 |
| ஊழியர் சேமலாப நிதியத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு | 2008 | 1,000 | 100 | 20 |
| இலங்கை இராணுவத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு (வெள்ளி) | 2009 | 1,000 | 10,000 | 835 |
| இலங்கை மத்திய வங்கியின் 60 ஆவது ஆண்டு நிறைவு | 2010 | 5,000 | 5,000 | 3,221 |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மத்திய வங்கி அதன் எதிர்கால செயற்பாட்டு நோக்கத்திற்காக ரூபா 122.81 மில்லியன் செலவில் மீளாய்வாண்டில் பிறேசில் நாட்டில் ஆதனமொன்றை கொள்வனவு செய்திருந்தது. இந்த ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அமைச்சரவையின் அங்கீகாரம் இலங்கை மத்திய வங்கியினால் பெறப்பட்டிருக்காததுடன் ஆதனத்தைப் பயன்படுத்துவதற்கான எதிர்காலத் திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்மானிக்கப்பட்டிருக்கவுமில்லை. இருப்பினும், 2015 பெப்ரவரி 01 இலிருந்து இரண்டு (02) ஆண்டுகளிற்காக இது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு பிறேசிலுள்ள இலங்கை தூதரகம் அத்திகதியிலிருந்து இந்த வளவில் இயங்கி வருகின்றது.

(ஆ) இலங்கை மத்திய வங்கி 2011 ஆகஸ்ட் 24 இல் ஐ.அ.டொலர் 6,207,116 (ரூபா 607,121,953) செலவழித்து நியூயோர்க்கில் கட்டிடமொன்றை கொள்வனவு செய்திருந்ததுடன் குறித்த நோக்கங்களிற்காக கட்டிடத்தை பயன்படுத்தாமல் ஐ.அ.டொலர் 68,000 மாதாந்த வாடகையில் 2012 யூன் 01 இலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. இருப்பினும், நாணயச் சட்டத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம், “இலங்கை மத்திய வங்கியானது அதன் கோரிக்கைகளில் எவற்றையேனும் திருப்திப்படுத்துவதற்கான அவ்வாறான ஆர்வம் தவிர்ந்த எந்தவொரு வியாபாரத்தில் அல்லது நேரடியாக ஆர்வம் கொண்ட வர்த்தக, கைத்தொழில் அல்லது வேறு கையேற்றலில் ஈடுபடாதிருத்தல் வேண்டும்.

(இ) இலங்கை மத்திய வங்கி ஒரு ஆண்டு காலத்திற்காக 2013 இல் வெளிநாட்டுக் கம்பனியுடன் உடன்படிக்கையொன்றில் கைசாத்திட்டிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து பின்வரும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மேலுமொரு ஆண்டுக்கு 2014 மார்ச் 16 ஆந் திகதி அது புதுப்பிக்கப்பட்டது.

- ஐக்கிய அமெரிக்காவில் உள்ள தீர்மானம் எடுப்போர்கள் இலங்கையினுடைய தற்போதைய அடைதல்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் பற்றி தெளிவான மற்றும் உண்மையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு விரிவான தகவல் தளமொன்றை வழங்குதல்;

- இலங்கையினுடைய நீண்டகால அரசியல் மற்றும் பொருளாதார சுபீட்சங்களை மேம்படுத்துவதற்கு மிகத் தேவையாகவுள்ள ஐக்கிய அமெரிக்கா (யூஎஸ்ஏ) இன் அரசியல் சூழலை பின்பற்றுதல்.

- ஐக்கிய அமெரிக்காவிலிருந்து அதிகளவான தனியார் துறை முதலீட்டை இலங்கைக்கு கொண்டுவருதல்.

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான சேவைக் கட்டணமாக முறையே 88.4 மில்லியன் மற்றும் ரூபா 50.2 மில்லியன் தொகை மேற்குறிப்பிட்ட வெளிநாட்டுக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இரண்டு திரைப்படங்களை தயாரிப்பதற்கும் அவற்றை இலத்திரணியல் ஊடகத்தினுடாக ஒளிபரப்புச் செயவ்தற்கும் ரூபா 12.2 மில்லியன் (ஐ.அ.டொ. 93,200) முற்பணம் 2013 இல் மேற்படி கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 38.0 மில்லியன் (ஐ.அ.டொ. 290,488) தொகை மேற்குறிப்பிட்ட ஊடக செயற்திட்டத்திற்கான எஞ்சிய கொடுப்பனவாக 2014 இல் செலுத்தப்பட்டது.

2014 யூன் மாதத்தில், மேற்படி உடன்படிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு பொது உறவுகள் மதியுரை மற்றும் அழுத்தச் சேவைகளை மேற்கொள்வதற்காக 2014 ஆகஸ்ட் இல் மற்றொரு வெளிநாட்டுக் கம்பனியுடன் ரூபா 99 மில்லியன் வருடாந்த சேவைக் கட்டணத்திற்கு இலங்கை மத்திய வங்கி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்ததுடன் அதில் ரூபா 49.0 மில்லியன் தொகை 2014 திசெம்பர் 31 வரை மேற்படி கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இலங்கை அரசாங்கத்தினுடைய வெளிநாட்டு கொள்கைக்கு அமைய இலங்கையின் சர்வதேச அக்கறைகளின் மேம்பாடு, செயல்முறை மற்றும் பாதுகாப்பு என்பன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பொறுப்பாக உள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. ஆகவே, இலங்கை மத்திய வங்கி அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்களிற்கு முரணானதாக உள்ளது.

(ஈ) சனாதிபதி செயலாளரின் கோரிக்கையின் மீது, மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மூன்று வெளிநாட்டு சேவை வழங்குவோருக்கு பொதுத் திறைசேரியிடமிருந்து மீள்நிரப்பல் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கி மீளாய்வாண்டின் போது ரூபா 1,396,222,710 தொகையினை செலுத்தியிருந்தது. இருப்பினும், சேவை வழங்குனர்கள் தெரிவுசெய்யப்படுதல், செய்யப்பட்ட வேலைகள் மற்றும் சேவைக்கான தேவைப்பாடுகள் தொடர்பிலான எந்தவொரு ஆதார ஆவணமும் காணப்படவில்லை. பின்னர் இதனை மத்திய வங்கியின் செலவினமொன்றாக எடுத்துக்கொள்ளுமாறு முன்னாள் சனாதிபதியின் செயலாளர் அவரது 2014 பெப்ரவரி 05 ஆந் திகதிய கடிதத்தினால் ஆளுனருக்கு அறிவித்திருந்தார். அதற்கிணங்க இத் தொகையானது திறைசேரியிடமிருந்து கோரப்படாது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் செலவினமாக கருதப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா

2,050,619,000 தொகையான மொத்த மதியுரை ஆலோசனை தொழில்சார் சேவை செலவினத்தில் 68 சதவீதத்தை இத் தொகை பிரதிநிதித்துவப்படுத்தியது.

(உ) இலங்கையில் சர்வதேச நிதியியல் நிலையத்தை நிறுவுவதற்கு வெளிநாட்டு கம்பனியொன்றுடன் இலங்கை மத்திய வங்கி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், முதலாவது தவணைக்கட்டணமான ஐ.அ.டொ. 250,000 தொகை 2014 ஒக்ரோபரில் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் இலங்கை மத்திய வங்கி மேலே குறிப்பிடப்பட்ட தொகையை பயனற்ற செலவினமாக உட்படுத்தி அந்த கம்பனியிடமிருந்து பெறுகின்ற சேவையை நிறுத்துவதற்கு தீர்மானித்திருந்தது.

"புதிய அரசாங்கத்தின் கீழ் நிதித் துறைக்கான கொள்கை வழிகாட்டல் முன்னைய வழிகாட்டல்களிலிருந்து வேறுபடும் என்பதனால் இலங்கையில் சர்வதேச நிதி நிலையத்தினை தாபித்தலுக்கான ஆலோசனைச் சேவையினை மேற்படி கம்பனியிடமிருந்து இலங்கை மத்திய வங்கியால் பெற்றுக்கொள்தல் என்பது இனிமேலும் பொருந்தாது என 2015 சனவரி 23 ஆந் திகதி நாணயச் சபை அறிவித்திருந்தது. வழங்கப்பட்ட தகவல்களைக் கருத்திற்கொண்டு மேற்படி கம்பனியிடமிருந்து சேவைகள் பெற்றுக்கொள்ளப்படுவதனை இடைநிறுத்துவதற்கு 2015 சனவரி 26 ஆந் திகதிய கூட்டத்தில் நாணயச் சபை தீர்மானித்திருந்ததுடன் அத் தீர்மானம் எழுத்து மூலமாக 2015 சனவரி 23 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது." என்பதாக இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுனர் எனக்கு அறிவித்திருந்தார்.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் கவனத்திற்கு காலத்திற்கு காலம் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) நாணய முகாமைத்துவம்
(ஆ) காணி மற்றும் கட்டிடம் மீதான கட்டுப்பாடு